# மாநில கல்லூரியில் வி.பி.சிங் சிலை: நவ. 27-ம் தேதி முதல்வர் திறக்கிறார்




**சென்னை:** உத்தர பிரதேச முதல்வராகவும், மத்திய நிதி, பாதுகாப்பு, வெளியுறவுத்துறை அமைச்சராகவும் பதவி வகித்தவர் வி.பி.சிங். தேசியமுன்னணி என்ற கூட்டணியை உருவாக்கி கடந்த 1989-ம் ஆண்டுநாட்டின் பிரதமரானார். 11 மாத அவரது ஆட்சியில் பல்வேறு சாதனைகள் புரிந்தார். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசுப் பணியில் 27 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்தினார். இந்நிலையில், கடந்த ஏப்.20-ம் தேதி சட்டப்பேரவையில்முதல்வர் மு.க.ஸ்டாலின், ‘‘சமூக நீதி காவலர் வி.பி.சிங்குக்கு மரியாதை செலுத்தும் விதமாக சென்னையில் அவரது முழு உருவசிலை அமைக்கப்படும்’’ என்று 110 விதியின்கீழ் அறிவித்தார்.

இதையடுத்து, வி.பி.சிங் பிறந்த தினத்தில், சென்னை மாநில கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் கோரிக்கையை ஏற்று, அக்கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் முழு உருவ சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார். இதன் அடிப்படையில் மாநில கல்லூரி வளாகத்தில் சிலை அமைப்புதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த சூழலில், வரும் நவ.27-ம்தேதி திங்கள்கிழமை மாநில கல்லூரி வளாகத்தில் வி.பி.சிங்சிலையை முதல்வர்ஸ்டாலின் திறக்கிறார். இந்நிகழ்ச்சியில் பங்கேற்க உத்தரப் பிரதேச

முன்னாள் முதல்வரும், சமாஜ்வாதிகட்சியின் தலைவருமான அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

## உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்த பிறகு 10 மசோதாவை திருப்பி அனுப்பியது ஏன்? - தமிழக ஆளுநருக்கு தலைமை நீதிபதி அமர்வு கேள்வி



**புதுடெல்லி:** சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஒப்புதலுக்காக வந்த மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் கிடப்பில் போட்டுவிட்டு, உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்த பிறகு 10 மசோதாக்களையும் தமிழக அரசுக்கு ஆளுநர் திருப்பி அனுப்பியது ஏன் என்று தலைமை நீதிபதி அமர்வு கேள்வி எழுப்பியுள்ளது.

சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிவைத்த மசோதாக்கள், அரசின் கொள்கை முடிவுகள் உள்ளிட்ட கோப்புகளுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்காமல் நீண்ட காலமாக கிடப்பில் போட்டு வைத்துள்ளதாகவும், ஆளுநர் ஒப்புதல் அளிக்க கால வரம்பு நிர்ணயம்செய்யக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தது. இதுபோல, கேரளா, பஞ்சாப் ஆளுநர்களுக்கு எதிராகவும் அந்தந்த மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தன.

தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்அமர்வில் இந்த வழக்குகள் நேற்றுமீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது நடந்த வாதம்:

**தமிழக அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் அபிஷேக் மனு சிங்வி, பி.வில்சன், முகுல் ரோஹ்தகி:** இந்த வழக்கில், தமிழகஆளுநரின் செயல்பாடு கவலை அளிக்கிறது என உச்ச நீதிமன்றம்தெரிவித்த பிறகே, 10 மசோதாக்களை தமிழக அரசுக்கு அவர் திருப்பிஅனுப்பியுள்ளார். அந்த 10 மசோதாக்களும் கடந்த 18-ம் தேதி மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஏற்கெனவே 5 மசோதாக்களை கிடப்பில் வைத்துள்ளார். ‘கூடிய விரைவில்’ என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு ஆளுநர் காலவரையின்றி இவ்வாறு மசோதாக்கள், கோப்புகளை தேக்கி வைக்க அனுமதித்தால் மாநிலங்களில் நிர்வாகம் முடங்கும்.

**நீதிபதிகள் (ஆளுநர் தரப்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் ஆர்.வேங்கடரமணியிடம்):** இந்த வழக்கில் எங்கள் கருத்தை தெரிவித்து கடந்த10-ம் தேதி நோட்டீஸ் பிறப்பித்தோம். அதன்பிறகு 13-ம் தேதி ஆளுநர்10 மசோதாக்களை தமிழக அரசுக்கு திருப்பி அனுப்பியுள்ளார். தமிழக அரசு இந்த மசோதாக்களை கடந்த2020-ல் ஆளுநருக்கு அனுப்பியுள்ளது. அப்படியென்றால், இந்த மசோதாக்களை கிடப்பில் போட்டு ஆளுநர் 3 ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருந்தார். மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தை நாடும் வரை ஆளுநர்கள் எதற்காக காத்திருக்க வேண்டும்.

**அட்டர்னி ஜெனரல் வேங்கடரமணி, சொலிசிட்டர் ஜெனரல் துஷார்மேத்தா:** கடந்த 2020 முதல் இதுவரை பெறப்பட்ட 181 சட்ட மசோதாக்கள், அரசாணைகள் உள்ளிட்ட கோப்புகளில் 152-க்கு ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார்.

**நீதிபதிகள்:** ஆளுநர் குறிப்பிட்ட ஒருசில மசோதாக்களை நிறுத்தி வைத்தார் என்பது பிரச்சினை அல்ல. பொத்தாம் பொதுவாக ஏன் அனைத்துமசோதாக்களையும் தேக்கி வைக்கிறார் என்பதே கேள்வி. பேரவையில் 2-வது முறையாக மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டால், அவற்றை பண மசோதா போலத்தான் கருத வேண்டும். ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமலும், மீண்டும் பேரவைக்கு அனுப்பாமலும் இருக்க முடியுமா. கடந்த 18-ம் தேதி 10

மசோதாக்களை தமிழக அரசு மீண்டும் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளது. அதன் மீது ஆளுநர் என்ன நடவடிக்கை எடுக்கிறார் என பொறுத்திருந்து பார்ப்போம்.

**மத்திய அரசு தரப்பு:** நிலுவையில் உள்ள மசோதாக்கள், கோப்புகள் மீதுஆளுநர் முடிவெடுக்க சற்று அவகாசம் வேண்டும்.

இவ்வாறு வாதம் நடந்தது. இதையடுத்து, விசாரணையை நீதிபதிகள் டிச.1-க்கு தள்ளிவைத்தனர்.

**181 மசோதா, கோப்புகளில் 152-க்கு ஒப்புதல்: ஆளுநர் 35 பக்க அறிக்கை:** தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து 35 பக்க அறிக்கையை அட்டர்னி ஜெனரல் வேங்கடரமணி, சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆகியோர் தாக்கல் செய்தனர். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

ஆர்.என்.ரவி கடந்த 2021-ல் தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவர் வெறும் தொழில்நுட்ப மேற்பார்வையாளர் அல்ல. பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் விவகாரத்தில் வேந்தர் என்ற ஆளுநரின் உரிமையை பறித்து முதல்வரிடம் கொடுப்பதுபோல மசோதா இருந்ததால், அவற்றை மறுஆய்வு செய்யவே திருப்பி அனுப்பினார். குட்கா வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் கோப்புக்கு ஒப்புதல் அளித்துள்ளார். கடந்த 2020 முதல் இதுவரை பெறப்பட்ட 181 சட்ட மசோதாக்கள், அரசாணைகள் உள்ளிட்ட கோப்புகளில் 152-க்கு ஒப்புதல் அளித்துள்ளார். 5 மசோதாக்களை அரசே வாபஸ் பெற்றது.9 மசோதாக்கள் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 10 மசோதாக்களை ஆளுநர் நிறுத்தி வைத்துள்ளார். 5 மசோதாக்கள் பரிசீலனையில் உள்ளது.

முன்னாள் அதிமுக அமைச்சர்கள் கே.சி.வீரமணி, பி.வி.ரமணா, சி.விஜயபாஸ்கர் மற்றும் முன்னாள் துணைவேந்தர் ஜி.பாஸ்கரன் ஆகியோருக்கு எதிரான விசாரணை நடவடிக்கைக்கு ஒப்புதல் தரப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு எதிரான கோப்பு பரிசீலனையில் உள்ளது.

580 ஆயுள் தண்டனை கைதிகளை முன்கூட்டியே விடுவிக்க கோரும் கோப்பில் 362 பேரை விடுவிக்க ஒப்புதல் தரப்பட்டுள்ளது.165 பேரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. 53 பேரின் கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

டிஎன்பிஎஸ்சிக்கு தலைவர், உறுப்பினர்கள் நியமிக்கும் அரசின் பரிந்துரையில் வெளிப்படைத்தன்மை இல்லை. துணைவேந்தர்களை நியமிக்கும் தேடுதல் குழு நியமனத்தில் உரிய வழிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதால் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஏடிபி பைனல்ஸ் தொடரில் 7-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிச்




ஏடிபி பைனல்ஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற செர்பியாவின் நோவக் ஜோகோவிச்.

**துரின்:** ஏடிபி பைனல்ஸ் தொடரில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 7-வது முறையாக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார்.

டென்னிஸ் தரவரிசையில் முதல் 8 இடங்களில் உள்ள வீரர்கள் கலந்து கொண்ட ஏடிபிபைனல்ஸ் தொடர் இத்தாலியில் உள்ள துரின்நகரில் நடைபெற்று வந்தது. இதன் இறுதி ஆட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நிலை வீரரான

செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 4-ம் நிலை வீரரான இத்தாலியின் ஜன்னிக் ஷின்னருடன் மோதினார். ஒரு மணி நேரம் 43 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 6-3, 6-3 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று கோப்பையை வென்றார்.

ஏடிபி பைனல்ஸ் தொடரில் ஜோகோவிச் பட்டம் வெல்வது இது 7-வது முறையாகும். இதன் மூலம் இந்த தொடரில் 6 பட்டங்கள் வென்றிருந்த முன்னாள் வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரின் சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார் ஜோகோவிச். 36 வயதான ஜோகோவிச், இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் தொடரில் பட்டம் வென்றார்.

தொடர்ந்து பிரெஞ்சு ஓபனில் வாகை சூடினார். பாரம்பரியமிக்க விம்பிள்டன் தொடரின் இறுதிப் போட்டியில் கார்லோஸ் அல்கராஸிடம் தோல்வி அடைந்த போதிலும் அதன் பின்னர் நடைபெற்ற ஆண்டின் கடைசி கிராண்ட் ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓபனில் மகுடம் சூடினார் ஜோகோவிச். தற்போது ஏடிபி தொடரையும் வென்று இந்த ஆண்டை சிறப்பாக நிறைவு செய்துள்ளார்.

ஏடிபி பைனல்ஸ் தொடரின் லீக் சுற்றில் ஜோகோவிச் தனது முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்ற போதே இந்த ஆண்டை நம்பர் 1 வீரராக நிறைவு செய்வதை உறுதி செய்து இருந்தார். உலக தரவரிசையில் நம்பர் ஒன் வீரராக ஜோகோவிச் ஆண்டை நிறைவு செய்வது இது 8-வது முறையாகும். 400 வாரங்கள் டென்னிஸ் தரவரிசையில் ஜோகோவிச் முதலிடத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்தி உள்ளார். இதன் மூலம் டென்னிஸ் வரலாற்றில் 400 வாரங்கள் முதல் இடத்தில் இருந்த முதல் வீரர் என்ற சாதனையையும் அவர், படைத்துள்ளார். இந்த வகையில் இதற்கு முன்னர் ரோஜர் பெடரர் அதிகபட்சமாக 310 வாரங்களில் முதலிடத்தில் இருந்தார்.

# தடுப்பூசி போட்டுக்கொள்வது குறைந்ததால் 2021 - 2022 காலக்கட்டத்தில் உலக அளவில் தட்டம்மை இறப்பு 43% அதிகரிப்பு



பிரதிநிதித்துவப் படம்

**புதுடெல்லி:** தடுப்பூசி போட்டுக்கொள்வது குறைந்ததால் 2021 முதல் 2022 வரை உலகளாவிய தட்டம்மை இறப்புகளில் 43% அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) மற்றும் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான அமெரிக்க மையம் (CDC) ஆகியவற்றின் புதிய ஆய்வறிக்கையில், "தடுப்பூசி போட்டுக்கொள்வது குறைந்து வருவதைத் தொடர்ந்து, 2021-2022-ல் இருந்து உலகளவில் தட்டம்மை இறப்புகளின் எண்ணிக்கை 43% அதிகரித்துள்ளது. கடந்த 2021-ல் 22 நாடுகளில் தடுப்பூசி போட்டுக்கொள்வது குறைந்ததாலும், 2022-ல் 37 நாடுகளில் தடுப்பூசி போட்டுக்கொள்வது குறைந்ததாலும் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 37 நாடுகளில் 28 நாடுகள் ஆப்பிரிக்காவையும், 6 நாடுகள் கிழக்கு மத்திய தரைக் கடல் பகுதியையும், 2 நாடுகள் தென்கிழக்கு ஆசியாவையும், ஒரு நாடு ஐரோப்பாவையும் சார்ந்தவை. இந்த நாடுகளில் தட்டம்மை தடுப்பூசி

போட்டுக்கொள்ளும் விகிதம் மிகக் குறைவாக இருந்ததே இதற்குக் காரணம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தட்டம்மை அதிகரிப்பும் இறப்பு அதிகரிப்பும் அதிர்ச்சியளிக்கிறது என்றும், இந்த நாடுகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ளும் விகிதம் குறைந்து வருவது எதிர்பாராதது. தட்டம்மை நோய் மற்றும் இறப்புகளைத் தடுக்க அவசரமாக இலக்குகளை நிர்ணயித்து செயல்படுவது முக்கியமானது" என்று CDC-இன் உலகளாவிய நோய்த் தடுப்பு பிரிவின் இயக்குநர் ஜான் வெர்டெஃபியூயில் கூறியுள்ளார். ஏறக்குறைய 2.2 கோடி பேர் முதல் டோஸையும், 1.1 கோடி பேர் இரண்டாவது டோஸையும் தவறவிட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதல் டோஸின் உலகளாவிய தடுப்பூசி கவரேஜ் விகிதம் 83% என்றும், இரண்டாவது டோஸ் கவரேஜ் விகிதம் 74% என்றும் தெரிவித்துள்ள உலக சுகாதார நிறுவனம், இரண்டு டோஸ்களையும் போட்டுக்கொள்வதன் மூலமே மக்களை நோய் பாதிப்பில் இருந்து பாதுகாக்க முடியும் என்று கூறியுள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் தட்டம்மையால் இறப்பதற்கான ஆபத்து அதிகமாக உள்ளதாகவும், இந்த நாடுகளில் தடுப்பூசி விகிதம் 66% மட்டுமே உள்ளது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2022-ஆம் ஆண்டில் முதல் தட்டம்மை தடுப்பூசி அளவை தவறவிட்ட 2.2 கோடி குழந்தைகளில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் அங்கோலா, பிரேசில், காங்கோ ஜனநாயக குடியரசு, எத்தியோப்பியா, இந்தியா, இந்தோனேஷியா, மடகாஸ்கர், நைஜீரியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகிய 10 நாடுகளில் வாழ்வதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்றார் நிகரகுவாவின் ஷெய்னிஸ் பலாசியோஸ்!



ஷெய்னிஸ் பலாசியோஸ்

**சான் சால்வடோர்:** மிஸ் யுனிவர்ஸ் 2023 பட்டத்தை வென்றுள்ளார் 23 வயதான ஷெய்னிஸ் பலாசியோஸ். இவர் மத்திய அமெரிக்காவில் உள்ள நிகரகுவா நாட்டை சேர்ந்தவர். அந்த நாட்டின் சார்பில் சர்வதேச அளவில் அழகிப் போட்டியில் முதல் முறையாக பட்டம் வென்றவர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

72-வது மிஸ் யுனிவர்ஸ் அழகிப் போட்டி எல் சால்வடாரின் சான் சால்வடாரில் உள்ள ஜோஸ் அடோல்போ பினெடா அரங்கில் நடைபெற்றது. இதில் தாய்லாந்து அழகி அன்டோனியோ போர்சில்ட் முதல் ரன்னர் அப் ஆகவும், ஆஸ்திரேலிய அழகி மொராயா வில்சன் இரண்டாவது ரன்னர் அப் ஆகவும் தேர்வானார்கள்.

இந்த நிகழ்வில் மிஸ் யுனிவர்ஸ் ஆக தேர்வான ஷெய்னிஸ் பலாசியோஸுக்கு கடந்த ஆண்டு பட்டம் வென்ற அமெரிக்காவின்

ஆர்'போனி கேப்ரியல் முடிசூட்டினார். பட்டம் வென்ற தேர்வான ஷெய்னிஸ் ஆடியோவிஷுவல் புரொடியூசராக செயல்பட்டு வருகிறது.

EVA STALIN IAS ACADEMY